# கற்பகம் திங்கள் இதழ்

KATPAKAM

விலை ரூபா 10/-


## குறளமுதம்-46

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-5 -அறத்துப்பால்-இல்லறவியல்**

"அறத்துஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்துஆற்றின் போஒய்ப் பெறுவது எவன்"

ஒருவன் இல்லற வாழ்க்கையை அதற்குரிய அறநெறிப்படி நடத்துவானானால், அவன் அதற்குப் புறம்பாகிய துறவு நெறியில் சென்று பெறத்தக்கது எது?


மலர்-04 ஒகஸ்ட்-2011 இதழ்-46


# சமூக பாதுகாப்பு நலத்திட்ட நிதிய நடைமுறை விதிக்கு அனுமதி!

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வழங்கினார் !**

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நிதிய நடைமுறை விதிக்கான அங்கீகாரத்தை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் வழங்கியுள்ளார்.

சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்கள். கொத்தணிகள், சித்த மருந்து உற்பத்தி வி.கூ.சங்கம், ஆகியவற்றின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், சமாசப் பணியாளர்கள் அவர்களுடன் இணைந்த குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் நலன்கள் கருதியும் அவர்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்குமாக அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தினை 01-01-2011ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த 11-06-2011ம் திகதிய நெறியாளர் குழுவின் 6வது தீர்மானத்துக்கு அமையவும் 18-06-2011ம் திகதிய விசேட பொதுச்சபைக் கூட்டத்தின் 8வது தீர்மானத்துக்கமையவும் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுவதாக அவரின் அனுமதிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிபந்தனைகள் வருமாறு,

- ➢ இத்திட்டத்தில் இணைந்துள்ள கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும் நிதி மாதாந்தம் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு திரண்ட நிதியினை வருடாந்தம் நிலையான வைப்பிலிடுதல் வேண்டும்.
- ➢ நிலையான வைப்பிலிருந்து பெறப்படும் வட்டியினூடாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- ➢ இக்கொடுப்பனவுகள் நடைமுறை விதிக்கு மாறாக வழங்கப்படுதல் ஆகாது.


(8ம்பக்கம் பார்க்க)


## போத்தற் கள்ளு உற்பத்தியை சங்கங்கள் விரிவுபடுத்த வேண்டும்!

தற்போது செயற்பட்டுவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிற்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கு 2012ம் ஆண்டுக்கான திட்டம் ஒன்றினை வகுத்து செயற்படவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் சங்கங்கள் போத்தலில் கள் அடைக்கும் தொழிலை விரிவுபடுத்தி பருவ காலங்களில் கூடுதலாக உற்பத்தியாகும் பனங்கள்ளினை பதப்படுத்தி போத்தலில் அடைத்து மாவட்ட மட்டத்துடன் நில்லாமல் பிற மாவட்டங்களுக்கும் சந்தைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் சங்கங்கள் ஈடுபடவேண்டும்.

இதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்து வழங்குவதற்கு சமாசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதன் மூலம் அங்கத்தவர்களது பொருளாதார அபிவிருத்தியை தக்க வைத்துக்கொள்ள முடியுமென மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன் (பனை தென்னை வளம்) தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சமாசத் தலைவர் உட்பட்ட உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறிமுகப் பயிற்சி நெறி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக நியமனம் பெற்ற பணியாளருக்கான அறிமுக பயிற்சி நெறி ஒன்றை இம்மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செய்து வருகிறது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த ஒரு வருட காலத்திற்குள் புதிதாக நியமிக்கப்பட்ட கூட்டுறவுப் பயிற்சி பெறாத பணியாளர்களுக்கே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

### சிந்தனைத்துளி

"ஒன்றுகூடுதல் ஒற்றுமையாகும், உண்மையில் அதுவே பலமாகும்."

-கவிஞர் கரைசுந்தரம்பிள்ளை-

## கற்பகக்கரு

### கூடுதல் முயற்சி தேவை!

மூன்று தசாப்த கால இடைவெளிக்குப் பின் தற்போது யாழ்ப்பாணத்துக்கும் தென்னிலங்கைக்குமான தரைவழிப் பாதை போக்குவரத்து பெருமளவு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இப்பாதை ஊடாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மட்டுமன்றி தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் பெருமளவில் இங்கு எடுத்து வரப்பட்டு தனியார் வர்த்தக உரிமையாளர்களால் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பனந்தொழிலை முக்கிய தொழிலாக கொண்டு இயங்கிவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் விழிப்படையவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

பனை வளத்தினை மையமாகக் கொண்டு உருவான கூட்டுறவு நிறுவனங்கள் தங்களது அங்கத்தவர்களது பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றன.

இச்சங்கங்கள் பனையிலிருந்து பெறப்படும் உற்பத்திகளில் கள்ளு உற்பத்தியை அதிகரிப்பதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டிய காலம் தற்போது வந்துள்ளது.

தென்னிலங்கையிலிருந்து செயற்கையான முறையில் கள்ளைத் தயாரித்து அவற்றை போத்தலில் அடைத்து வடமாகாணத்தில் சந்தைப்படுத்தி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தாராளமாக இக்கள்ளினை சந்தைப்படுத்தி வருவதனால், எமது பொருளாதாரம் சுரண்டப்படுவதுடன், அதனைப் பாவிப்பவர்களுக்கு பலவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகிறது. வன்னி மாவட்டத்திலுள்ள பனை வள நிறுவனங்களும் போத்தலில் கள்ளு அடைக்கும் தொழிற்பாட்டில் ஈடுபடுவதுடன் மேலதிக தேவைகளுக்கு வடமாகாண சமாசத்துடன் தொடர்புகொள்வார்களாயின் அவர்களது தேவைகளை நிறைவுசெய்ய சமாசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள 19 பனை தென்னை வள சங்கங்களும் மற்றும் கொத்தனிகளும் பனையிலிருந்து பெறப்படும் கள்ளினை சுகாதார முறைப்படி பதப்படுத்தி போத்தலில் அடைத்து பிற மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்துவதற்குரிய சாத்தியமான திட்டங்களை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

இதனை சங்கங்கள் நடைமுறைப்படுத்தும்போது அதிகளவு வருமானத்தை மட்டுமல்லாது வேலைவாய்ப்பினையும் அங்கத்தவர்களுக்கும் அவர் சார்ந்தோருக்கும் வழங்கமுடியும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கத்தவர்கள், பணியாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சங்கங்களின் ஸ்திரமான நிலைப்பாட்டுக்கு வழி வகுக்க முடியும்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இதனை அவ்வப்போது வலியுறுத்தி வந்துள்ளது. இந்நிலையில் இத்தொழிற்பாட்டினை திருப்திகரமான முறையில் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் சமாசம் செய்து கொடுக்க வேண்டிய ஒரு பொறுப்புக்கு ஆளாகியுள்ளது. இதனை சமாசம் நன்குணர்ந்து வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும் என கற்பகம் வலியுறுத்துகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

# கூட்டுறவுதின போட்டி முடிவுகள்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 89வது சர்வதேசக் கூட்டுறவுதின விழாவை ஒட்டி அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

## அங்கத்தவர்

### பேச்சு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | சி.அருமைத்துரை | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | வ.முத்துராசா | - சங்கானை ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | செ.கிருஸ்ணராசா | - சங்கானை ப.தெ.சங்கம் |

### கவிதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | பா.கணேசலிங்கம் | - வேலணை ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | சி.அருமைத்துரை | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |

### கட்டுரை

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | சி.அருமைத்துரை | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | பா.கணேசலிங்கம் | - வேலணை ப.தெ.சங்கம் |

## பணியாளர்

### பேச்சு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | மா.கார்த்தீபன் | - அச்சுவேலி ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | தா.தவச்செல்வன் | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | கி .தவம் | - மானிப்பாய் ப.தெ.சங்கம் |

### கவிதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | கி.வரதராசா | - அச்சுவேலி ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | கி.தவம் | - மானிப்பாய் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | தே.தவராசா | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| | கு.நிதர்ஷன் | - அச்சுவேலி ப.தெ.சங்கம் |

### கட்டுரை

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | தே.தவராசா | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | ப.சுதாகரன் | - காரைநகர் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | த.சுதாகர் | - கொடிகாமம் ப.தெ.சங்கம் |

## மகளிர்

### பேச்சு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | கா.சந்திரவதனி | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | ம.மன்றோமக்ரலீன் | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | ந.சுபிதா | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |

### கவிதை

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | ம.கிளியோபெற்றா | - காரைநகர் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | ம.மன்றோமக்கலீன் | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | கா.சந்திரவதனி | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| | பா.மதனரூபி | - பருத்தித்துறை ப.தெ.சங்கம் |

(8ம்பக்கம் பார்க்க)

*89வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சமாசம் அதன் அங்கத்துவ சங்கங்களின் பணியாளர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.*

# பனை தென்னை வள அ.கூ. சங்கத்தில் அங்கத்தவர், பணியாளர் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்!

தே.தவராசா
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்கள் ஏனைய கூட்டுறவு அமைப்புக்ள், நிறுவனங்களிலிருந்து தனித்துவம் பெற்ற ஆரோக்கியமான வளர்ச்சி நிலையை எட்டியுள்ள தன்னைத் தானே வளர்த்துக்கொண்டு அதன் வளர்ச்சியூடாக தான் சார்ந்த சமூகத்தின்பால் அக்கறை கொண்ட ஒரு அமைப்பாக தனித்துவம் பெற்றுத் திகழ்கிறது என்பது யாவரும் அறிந்ததே.

சுய பொருளாதார வளர்ச்சியில் எழுச்சி கண்டு தானும் தான் சார்ந்த அங்கத்தவர். பணியாளர், அவர் சார்ந்த குடும்பங்கள் அதற்கப்பாலும் சென்று இவர்களைக் கொண்ட சமூகம் என அனைவரது வாழ்வியல் மற்றும் பொருளாதார மேம்பாட்டினை தனது உச்ச வரம்பாக வரித்துக்கொண்டு கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாக அனைத்து நலத்திட்டங்களையும் வகுத்து செயற்படுவதில் கணிசமான வெற்றியினையும் வளர்ச்சியினையும் பெற்றுவிட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்களின் முதுகெலும்பாக, ஆணிவேராக, பக்க பலமாக, மூலதனமாகத் திகழ்பவர்கள் அதன் அங்கத்தவர்களும் பணியாளர்களுமே என்பதும் மறுத்துரைக்கப்பட முடியாத பேருண்மையாகும்.

பனை வளத்தினையே தமது வாழ்வாதார மூலதனமாகக் கொண்ட அங்கத்தவர்கள் தமது தொழில் முயற்சியினை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்களினால் நிர்ணயிக்கப்பட்ட சட்டதிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு கட்டுப்பட்டு உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்படுத்தி சங்கங்களின் நோக்கங்களுக்கமைவாக பெரும் பங்காற்றி வருவதால் அவர்களின் கடின உழைப்பினையும் பற்றுறுதியினையும் கீழ்ப் படிதலையும் மதிப்பளித்துச் செயற்படும் பணியயலையும் நன்குணர்ந்து கொள்ளலாம். பணியாளர் தொகுதியானது உண்மையாகவும் விசுவாசமாகவும் இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்பு நோக்குடனும் தமது சேவையை நல்குவதாலுமே ப.தெ.வ. அ.கூ.சங்க அமைப்பானது இன்று தன்னிறைவு பெற்ற அமைப்பாக பொருளாதார, சமூக, கல்வி நடவடிக்கைகளில் மேம்பாடு கண்டுள்ள அமைப்பாகத் திகழ்கிறது எனலாம்.

எனவே ஒருபுறம் வளர்ச்சியும் உயர்ச்சியும் காண வேண்டும் என்ற உத்வேகத்துடன் உழைப்பை, உற்பத்தியை மேற்கொள்ளும் அங்கத்தவர்கள் மறுபுறம் அவர்களது உழைப்பு, உற்பத்தியை வீணே விரயமாக்காது திட்டங்கள் வகுத்து பல நலத்திட்டங்களை உருவாக்கி அங்கத்தவர்களையும் வளர்த்து தானும் வளர்ந்து தன் சார்ந்த அமைப்பையும் வளர்த்துக்கொள்ளும் வினைத்திறன் மிக்க பணியாளர் என ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகத் திகழும் அங்கத்தவர், பணியாளர்களால்தான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்கள் இன்று ஏனைய அமைப்புக்களைக் காட்டிலும் முன்னிலையில் முதன்மை பெற்றவையாக விளங்கக் காரணமாக அமைந்து விடுகின்றன.

சிறப்பான செயற்பாடுடைய கூட்டுறவு அமைப்பு எதுவென இனங் கண்டுகொள்ளும் நோக்குடன் அண்மையில் எமது நாட்டில் நாடு தழுவிய ஆய்வினை மேற்கொண்ட குழுவொன்று எமது மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினையே இலங்கையில் இயங்கக்கூடிய கூட்டுறவு அமைப்புக்கள் அனைத்திலும் இருந்து தெரிவு செய்து பரிந்துரைத்து ஜுலை 2ம் நாள் குருநாகலில் நடந்த 89வது சர்வதேசக் கூட்டுறவாளர் பெருவிழாவில் வைத்து வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது எனில் இவ்வாறாக ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் முதன்மை பெறக் காரணம் அதன் அங்கத்தவர்களும் பணியாளர்களுமே என்பது கண்கூடு.

எனவே எத்தரப்பினரையும் குறைத்து மதிப்பிட முடியாத அளவுக்கு ஒரு தரப்புக்கு மறு தரப்பு நிகராக இணையாக அங்கத்தவர்களும் பணியாளர்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல திகழ்வதால்தான் இன்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்கள் சிறந்து விளங்க ஏதுவாக உள்ளன.


எனவே இன்னும் இன்னும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புகளுக்குள் இவ்வாறான அர்ப்பணிப்புமிக்க அங்கத்தவர்களையும், வினைத்திறன்மிக்க பணியாளர்களையும் உள்வாங்கி அவர்களின் உச்சப் பங்களிப்பினைப் பெற்று நல்ல பல நலத்திட்டங்களை கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாகத் தீட்டி செயற்படுத்தப்படுமானால் இவ்வாறான அமைப்புக்கள் மென்மேலும் வளர்ச்சி உற்று நாட்டின் பொருள்தார வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பை வழங்குவதுடன் வளர்ச்சி, உயர்ச்சி, விழிப்புணர்வு போன்றவற்றிலும் வானோங்கி வந்து விடும் என்பதும் முடிந்த முடிவாகும்.

ஆகவே வேறெந்த அமைப்புக்களிலும் காணப்படாத பல சிறப்பான குணவியல்புகளை, தன்னார்வ முயற்சி எனும் உயரிய பண்பினை, அர்ப்பணிப்பு, ஈடுபாடு, பொறுப்புணர்வு, புரிந்துணர்வு போன்ற சிறப்பான வினைத்திறன்மிக்க அங்கத்தவர்களையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப்போல பெற்றுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்கள் இவ்வாறான அங்கத்தவர்களையும் பணியாளர்களையும் தொடர்ச்சியாகக் கொண்டிருக்குமாயின் தன்னகத்தே தொடர்ந்து உள்வாங்கிக் கொள்ளுமாயின் அதன் பெறுமதி என்றும் மங்காது மழுங்காது ஒரு புத்தம் புதிய நாணயமாகத் திகழும். அது நாட்டுக்கும் நாட்டில் உள்ள அனைவருக்கும் பயன்படும் பெறுமதி சேர்க்கும் என்ற எனது கருத்தை முன்வைப்பதில் நிறைவடைகிறேன்.

# நிகழ்வுகளின் நிழல்கள் !

**89வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சமாசம் நடத்திய கூட்டுறவு தினப் போட்டியின் நிகழ்வுகள் சிலவற்றை கீழுள்ள படங்களில் காணலாம்.**

















## கூட்டுறவுக் கீதம்

89வது சர்வதேசக் கூட்டுறவுதினத்தை முன்னிட்டு இக் கூட்டுறவுக் கீதம் பிரசுரமாகிறது.

### பல்லவி

கூட்டுறவு மந்திரத்தைச் சொல்லுவோமாக–இங்கு
கூடிடும் பகை பிணியை வெல்லுவோமாக
(கூட்டு)

### அனுபல்லவி

நாட்டில் வாழ்வோங்கி நிலைபெறவே – நல்ல
ஞானப் பெரியோர்கள் நாட்டி வைத்த
(கூட்டு)

### சரணம்

அன்புடனே வாய்மைதனை நேர்மை கொண்டு
ஆர்வமதால் அனைவருமே ஒன்றாய்க் கண்டு
இன்புடனே பெருவாழ்வில் உழைத்தலொன்றும்
உயர்வான கூட்டுறவுக்குயிராமென்றோ
(கூட்டு)

துன்புடனே மக்களிங்கு சேர்ந்தபோது
தெய்வம் வந்துற்றதென வந்தணைந்து
தென்புதரும் கல்வி சுதந்திரமும் மேலாம்
தேசபக்தி விவசாயம் செழிக்கச் செய்யும்
(கூட்டு)

கூட்டுறவு நெறிகளே வேதமாகும்
கொண்டவற்றைக் கடைப்பிடிப்போர் மேலோராவார்
வாட்டமுறும் தொழிலாளிக் கூட்டாளிக்கும்
வாழ்வளிக்கும் உழவருக்கும் வாழ்வுநல்கும்
தேட்டத்தைச் சீராகப் பேணச் செய்யும்
செப்பு வட்டிக் கொடுமைக்குக் காலனாகும்
நாட்டிற்கு ஊட்டத்தை நல்கவல்ல
நலமிக்க வோறொன்று இல்லை என்று
(கூட்டு)

சாதியொடு சமய நெறிப் பூசல் போக்கி
சேரு மர சியல் வாழ்க்கைச் சார்பு நீக்கி
பேதங்கள் தலை தூக்காப் பான்மையாக்கி
பாரினிலே மாந்தர்க்கு வாழ்வு சேர்க்க
(கூட்டு)

பேதமின்றி கைவிரல் பொற்பிறங்களாக்கி
பேசி வரும் சமத்துவத்தை செயலில்காட்டி
நீதி மிகு உயர் தெய்வநாட்டில் இன்பம்
நீர்காணக் கூட்டுறவு நிலைக்கச் செய்வீர்!
(கூட்டு)

## உங்களுக்குத் தெரியுமா?

☞ அணுக்கொள்கையை முதன் முதலில் கண்டுபிடித்தவர்
**ஜோன் தாற்றன்**

☞ மின் பிறப்பாக்கிக்குரிய அடிப்படைத் தத்துவத்தை முதல் தலில் முன்வைத்தவர்
**மைக்கல் பரடே (கி.பி.1831)**

☞ "நனோ" எனும் கிரேக்கச் சொல்லின் அர்த்தம்
**குள்ளன்**

☞ எயிட்ஸ் நோய் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு
**1981ம் ஆண்டு**

☞ சுகதேகி ஒருவரின் குருதி அமுக்கம்
120/80 mmHg

☞ பச்சையத்தைக் கொண்டிராத தாவரம்
**காளான்**

☞ இலங்கையில் வரைபடத்தை வரைந்தவர்
**தொலமி**

☞ கலிலியோ கலிலி தொலைக்காட்டியைக் கண்டுபிடித்தது
**1608ம் ஆண்டு**

☞ இயற்கை வாயுவில் பிரதானமாக உள்ள வாயு
**மெதேன்**

☞ இந்தியாவில் விறகுக்கு மாற்றீடாக பயன்படுத்தப்படுவது
**மாட்டுச் சாணம்**

☞ சீமெந்து உற்பத்தியில் மூலப்பொருட்கள்
**சுண்ணாம்புக்கல், களிமண், ஜிப்சம்**

☞ பீங்கான் செய்யப் பயன்படும் களி
**களிகயோலின் களி**

☞ முஇறப்பரை வல்கனைப்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தவர்
**மிலர்**

☞ பூனை மிகவும் விரும்பி உண்ணும் தாவரம்
**குப்பைமேனி**

☞ உலகிலே மிகப்பெரிய பூவாகக் கருதப்படுவது
**ரஃப்லேசியா**

☞ சர்வதேச சுனாமி தகவல் நிலையம் எத்தனையாம் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு
**1965ம் ஆண்டு**

## அதிசயச் செய்திகள்

☞ உலகில் நீல நிற நாக்குடைய விலங்குகள் கறுப்புக்கரடி, சோசோநாய், நீல நாக்குப் பல்லி ஆகியன.
☞ ஒட்டகத்துக்கு மூன்று இமைகள் உள்ளன.
☞ தங்க மீனின் ஞாபக சக்தித் திறன் மூன்று நிமிடங்கள் மட்டுமே.
☞ நெருப்புக்கோழியின் கண்கள் அதன் மூளையைவிட பெரிதாக இருக்கும்.
☞ பின்புறமாகப் பறக்கக்கூடிய ஒரே ஒரு பறவை ஹம்மிங்போட்.
☞ நாடாப்புழு அதிகமாக 35 வருடங்கள் வரை உயிரோடு இருக்கிறது.

# பனை தென்னை வள அ.கூ. சங்கத்தில் அங்கத்தவர், பணியாளர், ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்!

*89வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சமாசம் அதன் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.*

**சி.அருமைத்துரை**
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய கூட்டுறவு அமைப்புக்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளன. இதற்கு காரணமான கலங்கரை விளக்காக இருப்பவர்கள் அங்கத்தவர்களும், பணியாளர்களுமே.

அங்கத்தவர்கள் தொழிலில் நேர்மை, இதயசுத்தி, கடமையே கண் என இருந்து, கொட்டும் மழையையும் பாராமல் "சோம்பி இரா எறும்பினம் ஊர்ந்து திரிவதே அதன் இயல்பு" எனும் முதுமொழிக்கேற்ப அல்லும் பகலும் தனக்கும் தன் குடும்பத்தின் எதிர்கால வாழ்வுக்காகவும் உழைக்கிறார்கள். இதன் மூலம் அங்கத்தவரின் உழைப்பின் ஒரு பகுதி சங்கத்திற்கும் செல்கிறது. இது ஒரு நாணயத்தின் ஒரு பக்கமாகும்.

அடுத்த பக்கத்தை நாம் புரட்டிப் பார்த்தால் அதில் தெரியும் விம்பம் பணியாளர்கள். அவர்கள் இல்லாவிட்டால் அங்கத்தவர்களின் உற்பத்தியை சந்தைப்படுத்துவது யார் என்ற கேள்வி எழுகிறது. ஆம் அவர்களும் கூட்டுறவு என்னும் நாணயத்தின் ஒரு பக்கமாக உள்ளவர்கள். இன்றைய காலகட்டத்தில் தென்னிலங்கை மதுபானங்களின் தாராள இறக்குமதியால் இளசுகள் பலர் பெருங்குடி மக்களாக உள்ளனர். அவர்களின் தணியாத தாகத்திற்கு அருமருந்தாக இருப்பது எமது உற்பத்தியே. உற்சாகத்துடன் ஆடிப்பாடி, தகாத வார்த்தைகளுடன் வரும் அவர்கள் எம் பணியாளருடன் முரண்படுவது உண்டு. அவற்றையெல்லாம் தீர்த்து அன்பு வழியில் அவர்களை உபசரிப்பவர்கள் பணியாளர்களே.

இந்த இரண்டு பக்க நாணயத்தில் ஒரு பக்கத்தில் ஏதேனும் கீறலோ அல்லது அழிவோ ஏற்படுமாயின் அந்நாணயம் செல்லுபடியற்றுப் போகும். அதே போலத்தான் அங்கத்தவர், பணியாளர் இருவரில் ஒருபக்கச் செயற்பாடு சீரில்லாவிடினும் நாணயத்தைப் போல சங்கமும் செல்லாக் காசாகிவிடும் என்பதை நாம் ஐயம் தெளிவுற உணரலாம்.

அடுத்து சங்கங்களின் வளர்ச்சியை உற்று நோக்குவோமாக இருந்தால் நாணயத்தின் ஒரு பக்கமான அங்கத்தவர்கள் அன்றைய காலத்தில் அதாவது 1972க்கு முற்பட்ட காலப்பகுதியில் மிகவும் பாடுபட்டு உழைத்தார்கள். நன்றாக தொழிலும் செய்தார்கள். பாடுபட்டு உழைத்த பணமெல்லாம் எங்கு சென்றது? தெரியவில்லை. ஏன் இந்த நிலைமை? அன்றைய காலத்தில் அவர்கள் சேமிப்பு என்பது பற்றிச் சிந்திக்கவில்லை. ஆள் ஆளாகத்தான் இருந்தார்கள். சிறு துளி சேமிப்புகூட அவர்களால் செய்யமுடியவில்லை. அது ஏன் என்பது இன்றைய சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும். அவர்களுக்கென ஒரு அமைப்பு இல்லை. இருந்திருந்தால் இந்நிலை அவர்களுக்கு வந்திருக்காது.

ஆனால் 1972ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலம் அவர்களுக்கு எப்படியிருந்து என நாம் பார்த்தோமாக இருந்தால், இக்காலப் பகுதியில் அவர்களுக்கென ஒரு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு செயற்படத் தொடங்கியது. அதை வழிநடத்த ஓர் தலைமைத்துவமும் அதனை நிர்வகிக்க ஒரு முகாமையும் இவர்களுக்கு ஆலோசனை வழங்கி நெறிப்படுத்த ஒரு கூட்டுறவுத் திணைக்களமும் என ஒரு கூட்டு முயற்சியின்மூலம் சரியான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் சிறக்க ஒளி கொடுக்கின்றார்கள்.

அடுத்து கூட்டுறவுச் சங்கத்தின் மற்றைய பக்கமாக இருக்கும் பணியாளர்கள் பற்றி நோக்குவோமாயின், கல்வியில் ஒருசிலரே முன்னுக்கு வந்த அன்றைய காலத்தில் அவர்களை உள்வாங்கி அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியது இப் பனை தென்னை வளச் சங்கங்களே. இவற்றின் நிர்வாகத் திறமையினால் தமது அங்கத்தவர்களை சமூகத்தில் முன்னேற்றமடைய வைக்க வேண்டும் என்ற நல்மனத்துடன் அவர்களை வளர்த்து சங்கமும் வளரவேண்டும் என்ற அடிப்படை எண்ணக்கருவுடன் சேமிப்புப் பழக்கத்தை அங்கத்தவர்களுக்கு புகட்டி அவர்களது பொருளாதாரத்தையும் வாழ்வையும் வளப்படுத்தினார்கள்.

நாம் இதுவரை ஒரு நாணயத்தின் இரு பக்கங்களையும் புரட்டிப் பார்த்தோம். இனி சற்று அந்த நாணயத்தினை ஒரே பார்வையில் நோக்குவோம். மிகவும் அழகான நாணயம். இரண்டு பக்கங்களிலும் கீறலோ, கிளிசலோ இல்லாது அன்றுபோல் புத்தம் புதிதாக காட்சியளிக்கிறது. அந்த நாணயம்தான் எமது பனை தென்னை வளச் சங்கங்கள். அன்று தொட்டு இன்று வரை இந்நாணயத் தாளை எந்த விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாத்து வைத் திருப்பவர்கள் இவ்விரண்டு பகுதியினருமே தான். தொடர்ந்தும் இவர்கள் நாணயத்துடன் நடந்து இந் நாணயத்தை பாதுகாப்பார்கள் என நம்பலாம்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# பனை வளத்தின் 8 அபிவிருத்திக்கு வழி பிறக்குமா?



பேராசிரியர் கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்

இது தவிர மருத்துவபீடத்தின் உயிரி இரசாயனவியல்துறையிலும் இது பற்றிய ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள விவசாயபீடத்தில் இப் பட்டப்பயில் டிப்ளோமா கற்கை நெறியினை உள்வாங்கும்பட்சத்தில் விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் மற்றும் இரசாயனவியல் துறைகளும் கலைப் பீடத்தின் பல துறைகளும் முகாமைத்துவ வணிகபீடமும், மருத்துவ பீடத்தின் உயிரி இரசாயனவியல் துறையும் இன்னும் சித்த வைத்தியத்துறை, இராமநாதன் நுண்கலைப் பிரிவின் சித்திரமும் வடிவமைத்தலும் துறை என அனைவரும் இணைந்த துறைகளுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் கற்கை நெறியாக இதனை உருவாக்குதல் நன்று. அதற்கான இக்கற்கை நெறிக்கான பாட அலகுகள் தேவையான ஆளணி, கற்கைக்கான ஏனைய வளங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டும். பனை சார்ந்த கற்கை நெறியை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை புலமையாளர்கள் முன்மொழிந்திருக்கும் இந்த நிலையில் இதனைச் செயற்படுத்தும் சாத்தியத்தைப் பொதுமக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தலாம். இதில் ஆய்வுக் கட்டமைப்பில் விரைவில் புனரமைக்கப்படும் பனை அபிவிருத்திச் சபையின் பனை ஆராய்ச்சி நிலையத்தையும் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம். எமது பிரதேசத்தில் உள்ள வளத்தைப் பற்றியதான இக்கற்கைநெறி பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைப் பதிவுசெய்து கற்கை நெறியினூடான வேலைவாய்ப்பு, ஆய்வு விருத்தி இவற்றுடனான அபிவிருத்தி என்பன இங்கே அலசி ஆராயப்பட வேண்டிய விடயங்களாகின்றன. வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து எங்களூர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டினை கல்விக்கண் கொண்டு சீர்தூக்கிவிடவேண்டியது எமதெல்லோருக்கும் முன்னாலுள்ள சவாலாகவே உள்ளது. இது பற்றிய கருத்துக்கள் அரசசார்பற்ற இணையத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணச் சிந்தனைக் கூடத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கருத்தரங்கிலும் முன்மொழியப்பட்டுள்ளது. இக்கற்கைநெறி பற்றிய கருத்துக்களையும் மேலும் பரிமாறி அதனை ஆரம்பிப்பதன் பலாபலன்களை அனைவருக்கும் தெளிவுபடுத்தி இதனை செயல்வடிவமாக்கும் நாளை எதிர்பார்த்திருப்போம். அதன் மூலமே பனைசார் அபிவிருத்தி என்பது முழுமைபெறும்.

“என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்” எனும் வாக்குக்கிணங்க எமது பிரதேசத்திலுள்ள இயற்கையருளிய வரத்திலொன்றான பனைசார் வளங்களைப் பாதுகாக்கின்ற அதே நேரத்தில் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தவும் நாம் முனைய வேண்டும். எமது பிரதேசத்தினுடைய அபிவிருத்தியில் இதற்கும் வழிபிறந்திட வேண்டுமல்லவா?

வளர்ந்து செல்லும் விஞ்ஞானத்துடன் எமக்கிருக்கும் வளங்களை உள்வாங்கி உள்ளூர் உற்பத்தியை பெருக்கி விவசாயம் சார்ந்த கைத்தொழில் முயற்சிகளுக்குள் முனைப்புடன் இறங்க வேண்டும். தொழில்நுட்ப விருத்தியின் முழுப் பலனையுமே எங்களூர் கைத்தொழில் மறுமலர்ச்சியினுள் உள்வாங்கிட வேண்டுமென்ற உங்களது அங்கலாய்ப்பும் நியாயமானதே. ‘எங்களது உணவை நாங்களே உற்பத்தி செய்வோம்’ என்னும் சிந்தனைக்கு வலுவூட்டும் காலம் இதுவென அனைவருமே உணர்ந்திருக்கும் இவ்வேளையில் அதற்கான முன்முயற்சிகளில் இறங்கிச் செயற்படுதல் நன்றல்லவா?

கற்பகதருவின் வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தப் பலவிதமான தொழில்நுட்பங்களின் சேர்க்கை அவசியமானது. இதன் மூலம் உள்ளூர் மூலதனத்தை நம்பிய கைத்தொழில் வளர்ச்சியினை எட்டமுடியும் என்பதுடன் அதனூடாக எங்கள் பிரதேசத்து மக்களுக்கான வேலைவாய்ப்பினையும் அதிகரிக்க முடியும். உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் எங்கள் உறவுகளினது தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில் உலக சந்தையின் தரத்திற்கும் உயர்ந்திட வேண்டும் இங்கேதான் எங்களது கவனம் இன்னும் கனதியானதாக இருக்க வேண்டும். உலக சந்தையின் தரத்திற்கு உயருதலும் அதனைத் தக்கவைத்தலும் இலகுவான காரியங்களல்ல என்பது அனைவருக்கும் புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனாலும் அதை நோக்கிய எமது பயணம் முழுமைபெறுவதற்கு அவசியம் கற்பகதருவினுடைய வளத்தை மேன்மைப்படுத்தலும் தொழில்நுட்பத்தை உள்வாங்குதலுமேயன்றி வேறு வழியில்லை. இதுவரையிலும் இனங்காணப்பட்ட தொழில்நுட்ப அறிவை அந்தந்தத் துறைசார்ந்த புலமையாளர்களின் ஒன்றிணைவுடன் பயன்படுத்த முனையும் அதேவேளையில் வளங்களின் செம்மையானதும் வினைத்திறனானதுமான பயன்பாட்டுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

01) பனங்கள்ளிலிருந்து சாராயம் வடித்தெடுக்கப்படும்போது கழிவாக வெளிவரும் நீரை Spent Wash என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இந்த வடிசாலைக் கழிவுநீரின் கார அமிலத்தன்மை (pH) அண்ணளவாக 5 எனும் சுட்டியை நோக்கியிருப்பதனால் அதனைக் குறிப்பிட்ட பக்றீரியாக்களை வளர்க்கக்கூடிய ஊடகமாகப் பயன்படுத்தலாம். இந்தக் கழிவை ஊடகப் பொருளாகப் பயன்படுத்தி தாவர மற்றும் விலங்குக் கழிவுகளை, அதாவது சேதனக் கழிவுகளை விரைந்து உக்க வைக்கும் மண் வாழும் பக்றீரியாக்களை வளர்க்க வாய்ப்புள்ளதாக விவசாய உயிரியல் துறையில் செய்த ஆய்வுகளின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான கழிவிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் தினந்தினம் உருவாகும் சேதனக் கழிவுகளை உக்க வைக்கும் பக்றீரியாக்களை பெருமளவில் வளர்த்தெடுக்கச் சந்தர்ப்பமிருப்பதனால் இது சார்ந்த ஆய்வுகளை மேலும் முடுக்கி விட வேண்டிய தேவை எழுந்துள்ளது. சேதனக் கழிவுகளை உக்கவைக்கும் விவசாயிகளின் நண்பனாகச் சிறந்த பக்றீரியாக்களைக் கண்டறிய முடியுமாயின் வடிசாலைக் கழிவினை மீள்சுழற்சி செய்து சேதன திண்மக் கழிவுகளை உக்க வைக்கும் பக்றீரியாவுக்கான சிறந்த ஊடகமாகப் பயன்படுத்த முடியும். இந்த வடிசாலைக் கழிவுகளைத் தனியாகவோ அன்றி இன்னும் தேவையான மூலகங்களைச் சேர்த்தோ சிறந்த ஊடகமொன்றைக் கண்டுபிடிக்கக் கூடிய வாய்ப்பு அதிகமே. அவ்வாறு கிடைக்கப்பெற்றால் தினந்தினம் நாம் சிரமப்படும் சேதனத் திண்மக் கழிவுகளை நுண்ணங்கிகளால் இலகுவாக உக்க வைத்து கூட்டுரமாக ஆக்கிவிடமுடியும்.

(வளரும்)

கூட்டுறவு..... 2ம் பக்கத் தொடர்ச்சி

**மகளிர் கட்டுரை**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | ம.மன்றோ மக்ரலீன் | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | லி.சரோசா | - சங்கானை ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | பா.மதனரூபி | - பருத்தித்துறை ப.தெ.சங்கம் |
| | ந.சுபிதா | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |

**முன்பள்ளி மாணவர்**

**திருக்குறள் மனனப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | லோ.டுஷானு | - கோண்டாவில் ப.தெ.சங்கம் |
| 2ம் இடம்: | த.தாட்சாயினி | - சுன்னாகம் ப.தெ.சங்கம் |
| 3ம் இடம்: | பி.நிறைமதி | - அச்சுவேலி ப.தெ.சங்கம் |

**குழு நடனப்போட்டி**

1ம் இடம்: கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
2ம் இடம்: மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
3ம் இடம்: சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

போத்தற்..... 1ம் பக்கத் தொடர்ச்சி

➢ ஒவ்வொரு கொடுப்பனவின் போதும் எனது முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

➢ இத்திட்டத்தில் ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமாயின் பொதுச் சபையினதும் நெறியாளர் குழுவினதும் தீர்மானத்துடன் எனது முன்னனுமதியுடன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புரட்டாதிமாத கல்விப் பயிற்சி**

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையும் சமாசமும் இணைந்து நடத்தும் புரட்டாதி மாதத்துக்கான கல்விப் பயிற்சிகள் இம்மாதம் நடைபெறவுள்ளன.

இதில் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியும், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினதும் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினதும் பணியாளர்களுக்கான பயிற்சியும் அந்தந்தச் சங்கங்களில் நடைபெறவுள்ளன.

# வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

18ற்கு மேற்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும், 3 கொத்தணிகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் செயற்பாடுகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் யாழ்.கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து வழங்குவதுடன், அவற்றின் அங்கத்தவர்களினதும் பணியாளர்களினதும் பொருளாதார, சமூக நலன்களை மேம்படுத்தும் நலத் திட்டங்களை அந்தந்த சங்கங்களின் நிதியுதவியுடன் செயற்படுத்திவரும் சமாசத்தின் செயற்பாடுகள் மென்மேலும் சிறப்புற அங்கத்துவ சங்கங்களினதும் கொத்தணிகளினதும் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் சமாசம் வேண்டி நிற்கிறது.



## மண்டப வாடகைச் சேவை!

சமாச அலுவலகத்தின் மேல்தளம் மிக அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டு, அங்கத்துவ சங்கங்கள், ஏனைய வெளி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டோர் ஆகியோர் கூட்டங்கள், கருத்தரங்குகள், மங்கள நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகள் என்பவற்றை சிறப்பாக நடத்தக்கூடிய வகையில் ஒலிபெருக்கிச் சாதனங்களுடன் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்குவதற்கு தயாராக உள்ளது. இம் மண்டபத்தை பயன்படுத்த விரும்புவோர் சமாசத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.

## நாட்காட்டிகள்- 2012

சமாச பதிப்பகத்தினால் 2012ம் ஆண்டுக்கான வாக்கியப் பஞ்சாங்க நாட்காட்டிகள் அச்சிடப்பட்டு, குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை பெற்றுக்கொள்ள விரும்புவோர் முற்கூட்டியே தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021 222 5072

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2011ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது.